# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2097/16 – 2018 නොවැම්බර් මස 14 වැනි බදාදා – 2018.11.14

*2097/16 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

மேல் மாகாண மாகாண சபையின் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியதிச்சட்ட வரைபினை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**கெஜிடன் லலித் வனிகரத்ன,**
மேல் மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும்
வர்த்தகம், வீடமைப்பு மற்றும் நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள்,
கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சர்.

மேல் மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும்
வர்த்தகம், வீடமைப்பு மற்றும் நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள்,
கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு,
இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2018, செத்தெம்பர் 26.

**மேல் மாகாணத்தின் மாகாண சபையின்**
**கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியதிச்சட்டம்**

மேல் மாகாணத்தின் மாகாணக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவொன்றை ஏற்படுத்துவதற்காகவும், மேல் மாகாணத்தில் கூட்டுறவு ஊழியர் தொடர்பான விசேட ஏற்பாடுகளை தயாரிப்பதற்கும் அது தொடர்பானதும் மற்றும் இடைநேர் விளைவான கருமங்களுக்குரிய ஏற்பாடுகளைச் செய்வதற்காகவும் மேல்மாகாண மாகாண சபையின் 1994 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் நியதிச் சட்டத்தை வலுவில்லாதிருக்கச் செய்வதற்கான ஏற்பாடுகளை செய்யும் பொருட்டுள்ள நியதிச் சட்டமாகும். இந்நியதிச் சட்டம் 1972 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சட்டத்திற்கு இயைவற்றதாகும்.


1A - PG4278 - 307 (2018/10)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேல் மாகாணத்தின் மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக.

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

1. இந் நியதிச் சட்டம் மேல் மாகாணத்தின் மாகாண சபையினால் 2018 ஆம் ஆண்டின் ............... ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் நியதிச் சட்டமென எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன் மேல் மாகாண ஆளுநரினால் அனுமதி கிடைத்த திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும்.

## பாகம் I

### மேல் மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் அமைப்பும் தத்துவங்களும் மற்றும் பணிகளும்

கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவொன்றை தாபித்தல்.

2. (1) இதனகத்து இதன் பின்னர் "ஆணைக்குழு" என குறிப்பிடப்படும் மேல்மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு இவ்வாறு தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் (1) உட்பிரிவுக்கமைய உரிய பெயரின் கீழ் இடையறா வழியுரிமையையும் மற்றும் பொது இலச்சினையொன்றும் கொண்டு வழக்கொன்றைத்தொடுப்பதற்கும் வழக்கொன்றை தொடர முடியுமான வகையில் தாபிக்கப்பட்ட நிறுவனமொன்றாக காணப்படல் வேண்டும்.

ஆணைக்குழுவின் கூட்டிணைப்பு.

3. (1) ஆணைக்குழு அமைச்சரினால் நியமிக்கப்படக்கூடியவாறான கீழே குறிப்பிடப்படும் அங்கத்தவர்கள் மூன்று பேரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) இலங்கை நிர்வாக சேவையில் ஓய்வுபெற்ற ஆளொருவர்;
(ஆ) உயர் நீதிமன்ற சட்டத்தரணியொருவர்;
(இ) அரசாங்கம் அல்லது அரசாங்கக் கூட்டுத்தாபனம் அல்லது அரசாங்கத்துக்குரிய சபை அல்லது நிறைவேற்று அதிகாரி மட்டத்தில் ஓய்வு பெற்ற அலுவலர் ஒருவர்;

(2) மேலுள்ள 1 (அ) உட்பிரிவின் கீழ் நியமிக்கப்படக்கூடிய உறுப்பினர் ஆணைக்குழுவின் தலைவராக அமைச்சரினால் நியமிக்கப்படல் வேண்டும்.

(3) மேலுள்ள (1) மற்றும் (2) உட்பிரிவின் கீழ் செய்யப்பட்டுள்ள நியமனம் நீதிமன்றத்தில் சத்தியத்தினை எடுத்துள்ள திகதி தொடக்கம் அமுல்படுத்தப்படும் வகையில் அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

உறுப்பினர் ஒருவராக இருப்பதற்கு தகைமையற்றவர்.

4. எவராவது ஒருவர் :

(அ) கூட்டுறவுச் சங்கமொன்றின் உத்தியோகத்தர் ஊழியர் அல்லது முன்னைய உத்தியோகத்தர், ஊழியர் ஆயின்; அல்லது
(ஆ) ஏதாவது கூட்டுறவுத் தொழில் சங்கமொன்றின் உறுப்பினராக இருப்பின் அல்லது கூட்டுறவுச் சங்கமொன்றிற்குப் பதிலாக சேவையில் ஈடுபடும் வேறு எவராவது ஏதும் நிறுவனமொன்றில் சம்பளங்களை அல்லது கூலிகளை பெற்று வருபவராயின்; அல்லது
(இ) பாராளுமன்ற உறுப்பினராக, மாகாண சபை உறுப்பினராக இருப்பின் அல்லது உள்ளூராட்சி நிறுவனத்தின் உறுப்பினராக இருப்பின் அல்லது தொழிற்பாட்டு அரசியல் தொடர்பான ஒருவராக இருப்பின்; அல்லது
(ஈ) இலங்கைப் பிரசை அல்லாதவராக இருப்பின்; அல்லது
(உ) இலங்கையில் அல்லது வேறு ஏதாவது நாட்டில் அதிகாரம் அமுல்படுத்தப்படும் ஏதாவது சட்டத்தின் கீழ் மனநிலை பாதிக்கப்பட்டவரென தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தால் அல்லது வெளிப்படுத்தப்பட்டிருந்தால்; அல்லது
(ஊ) இலங்கை அல்லது வேறு ஏதாவது நாட்டின் நீதிமன்றத்தினால் குற்றமிழைத்தவராகவும் அதற்குரிய குற்றவாளியாக காணப்படின்; அல்லது

(எ) இந்நியதிச் சட்டத்தின் 6 ஆவது பிரிவின் கீழ் நீக்கப்பட்டுள்ள உறுப்பினர் அல்லது உறுப்பினர் அங்கத்துவத்தை இரத்துச் செய்யப்பட்ட ஒருவராக இருப்பின், அத்தகைய ஒருவரை ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமிப்பதற்கு அல்லது கருமங்களை மேற்கொள்வதற்கு தகைமையற்றவராக கருதப்படுவர்.

5.(1) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும் அவர் நியமிக்கப்பட்டதிலிருந்து மூன்று வருட காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும். மேலும் 6(1) ஆவது உட்பிரிவின் கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டால் அன்றி மீண்டும் நியமிக்கப்படுவதற்கு தகைமையற்றவராக இல்லாதிருத்தல் வேண்டும். உறுப்பினர்களின் பதவிக் காலம்.

(2) உறுப்பினர் ஒருவரை பதவியிலிருந்து அகற்றப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது தானாக பதவியிலிருந்து விலகும் சந்தர்ப்பத்தில் மீண்டும் நியமிக்கப்படும் உறுப்பினரால் முடிவுறாத எஞ்சியுள்ள பதவிக் காலத்திற்கு மாத்திரம் பதவி வகிக்க முடியும்.

(3) நோயினால் பீடிக்கப்பட்டு அல்லது வேறு குறைபாடுகளினால் பாதிக்கப்பட்டுள்ள அல்லது இலங்கையிலிருந்து வெளியே இருக்கும் காரணமாக அல்லது தனது பதவியின் கருமங்களை நிலை நாட்டுவதற்கு உறுப்பினர் ஒருவருக்கு தற்காலிகமாக முடியாதிருந்தால் உறுப்பினர் பதவியின் கடமைகளைப் பார்ப்பதற்காக அமைச்சினால் ஆணைக்குழுவுக்கு வேறு உறுப்பினர் ஒருவரை நியமிக்க முடியும்.

6.(1) அமைச்சினால் எவராவது ஒரு உறுப்பினரின் நடத்தை செயற்பாடுகள் தொடர்பாக திருப்தியுராவிட்டால் அந்த உறுப்பினரின் நியமனத்தை இரத்துக் செய்ய முடியும்.

(2) தானாக கேட்டு விலகிக் கொள்கின்றேன் என அமைச்சரிடம் அனுப்பப்பட்ட கடிதம் அமைச்சரினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அறிவிக்கப்பட்ட பின்னர் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவருக்கு உறுப்பினராகவோ அல்லது தலைவராகவோ அல்லது சுயமாக பதவியில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கேட்டு விலகிக் கொள்ள முடியும்.

(3) அமைச்சரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட முறையான அனுமதியின்றி தொடர்ச்சியாக ஆணைக்குழுவின் கூட்டத் தவணை மூன்றுக்கு சமுகமளிக்காத உறுப்பினர் ஒருவரின் உறுப்பினர் அங்கத்துவம் இரத்துச் செய்யப்படும்.

7.(1) ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் சமுகமளித்துள்ள சந்தர்ப்பங்களில் ஆணைக் குழுவின் சகல கூட்டங்களும் அவரது தலைமையின் கீழ் நடைபெற வேண்டும். ஆணைக்குழுவின் ஏதாவது கூட்டமொன்றுக்கு தலைவர் சமுகமளிக்காத பட்சத்தில் சமுகமளித்துள்ள உறுப்பினர் இருவருக்கிடையில் இணக்கப்பாட்டின் அடிப்படையில் அவர்களில் ஒருவர் கூட்டத்திற்கு தலைமை வகிக்க முடியும். ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் அங்கு அலுவல் களைக் கொண்டு நடாத்துதல்.

(2) ஆணைக்குழுவின் கூட்டமொன்றுக்கு கூட்ட நடப்பெண் இரண்டு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கு இரண்டு உறுப்பினர்கள் மாத்திரமே சமுகமளித்திருந்தால் ஏதேனும் விடயத்தின் மீது எடுக்கப்பட வேண்டிய ஏதேனும் முடிவுபற்றி அத்தகைய ஆணைக்குழு உறுப்பினர்கள் தமது அபிப்பிராயத்தில் பிளவுபட்டிருந்தால் அத்தகைய விடயமானது ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்களும் சமுகமளித்துள்ள கூட்டத்திற்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மூவரும் சமுகமளித்துள்ள ஏதாவது கூட்டமொன்றில் ஏதாவது பிரச்சினை யொன்று தொடர்பாக ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கிடையில் கருத்து வேறுபாடுகள் காணப்பட்டால் அந்த விடயம் தொடர்பாக சமுகமளித்துள்ள உறுப்பினர்களில் கூடுதலானவர்களின் கருத்துக்கு அமைய தீர்மானம் எடுக்கப்படல் வேண்டும்.

(5) இந்த நியதிச் சட்டத்தில் அல்லது அதன் கீழ் தயார் செய்யப்பட்டுள்ள ஏதாவது கட்டளையொன்றில் நிலையான ஏற்பாடுகள் தயாரிக்கப்படாத ஏதாவது விடயம் தொடர்பாக ஆணைக்குழுவினால் தீர்மானம்

எடுக்க முடியும் என்பதுடன் அது தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானம் இந்த விடயம் தொடர்பான இறுதியான முடிவாகும்.

(6) ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கிடையில் வெற்றிடமொன்று காணப்படுவதினால் அல்லது உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பாக குறைபாடு காணப்படுவதினால் அல்லது ஆணைக்குழுவின் ஏதாவது செயற்பாடுகள் அல்லது நடைமுறைப்படுத்தலை இரத்துச் செய்யப்படலாகாது.

உறுப்பினர்களின் ஊதியம்.

8. ஆணைக்குழுவின் தலைவருக்கு மற்றும் உறுப்பினர்களுக்கு மாகாண நிதி விடயத்திற்குப் பொறுப்பான மாகாண அமைச்சின் இணக்கப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஊதியம் மற்றும் படிகள் செலுத்தப்படல் வேண்டும்.

செயலாளரும் ஏனைய அலுவலர்களும்

9.(1) ஆணைக்குழுவின் செயலாளரும் மற்றும் அவருக்கு உதவுவதற்காக பணியாட்தொகுதியொன்றும் இருத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் செயலாளர் இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

ஆணைக்குழுவின் உறுப்பினர்களும் மற்றும் அலுவலர் களும் சத்தியம் செய்தல்.

10. (1)ஆணைக்குழுவின் உறுப்பினர்களினால் அவர்கள் முதலாவதாக நியமிக்கப்பட்டதும் இந்நியதிச் சட்டத்துக்கான அட்டவணையில் இலக்கம் 1 இல் தரப்பட்டுள்ள படிவத்திலான சத்தியத்தினை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் உறுதி மொழியொன்றைச் செய்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் செயலாளரினால் மற்றும் ஏனைய அலுவலர்களினாலும் அவர்கள் ஆணைக்குழுவில் நியமிக்கப்பட்ட ஒரு மாத்திற்குள் இந்நியதிச் சட்டத்தின் அட்டவணையில் இலக்கம் 2 இல் தரப்பட்டுள்ள படிவத்திலான சத்தியத்தினை அல்லது உறுதி மொழியொன்றைச் செய்தல் வேண்டும்.

ஆணைக்குழுவில் பணியாட் தொகுதியினரை நியமிப்பதற்கு தகைமையற்ற வர்கள்.

11. ஆணைக்குழுவின் பணியாட்தொகுதி உறுப்பினர்களில் எவராவது ஒருவரின் வாழ்க்கைத்துணைவி, தாய் தந்தையர்கள், பிள்ளைகள் அல்லது குடும்ப அங்கத்தவர்களில் ஒருவர் என ஆணைக்குழுவினால் கருதப்படும் எவராவது உறவினர் தொடர்பானவர் ஏதாவது கூட்டுறவுச் சங்கத்தில் பதவி வகிக்கின்றார் எனின் அவ்வலுவலர் ஆணைக்குழுவின் பணியாட்தொகுதிக்கு நியமிப்பதற்குத் தகைமையற்றவராகக் கருதப்படுவர்.

12. (1) ஆணைக்குழு பின்வரும் தத்துவங்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

(அ) கூட்டுறவு சங்கங்களுக்கு ஊழியர்களை ஆட்சேர்க்கும் முறைகளும் அதற்குரிய சகல விடயங்கள் மற்றும் அவர்களது சேவை நிபந்தனைகள் நியமனங்களைச் செய்யும் போது மற்றும் கூட்டுறவுச் சங்கமொன்றில் ஒரு பதவியிலிருந்து அதே சங்கத்திலுள்ள வேறொரு பதவிக்குப் பதவி உயர்வுகளைச் செய்வதிலும் சங்கத்தினால் பின்பற்றப்பட வேண்டிய கொள்கைகளும் நெறிகளும் தீர்மானித்தல் அத்தகைய ஏதாவது பதவியொன்றுக்கு நியமிப்பதற்காக தேவையான தகைமைகளைத் தீர்மானித்தல்.

(ஆ)(i) கூட்டுறவு சங்க ஊழியர்களுக்கான ஆட்சேர்ப்பதற்கான பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் அத்தகைய பரீட்சைகளை நடாத்தும் பணிகளுக்கான பரீட்சைக் குழுவை நியமித்தல் மற்றும் பரீட்சைகளுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடம் அதற்குரிய கட்டணங்களை அறவிடல்

(ii) கூட்டுறவு ஊழியர்களின் பதவி உயர்ச்சிக்கான படிமுறைகள், செயலாற்றுகைகளை அளவிடலுக்கான வினைத்திறமை காண் தடைதாண்டல் பரீட்சையை நடாத்துதல் மற்றும் அதற்காக பரீட்சைக் குழுக்களை நியமித்தல் மற்றும் அதற்குரிய கட்டணங்களை அறவிடல்.

(iii) கூட்டுறவு ஊழியர்களின் பாட விடயங்களுக்குரிய பயிற்சிப் பாடநெறி நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல், நடாத்துதல் மற்றும் அதற்குரித்தான கட்டணங்களை அறவிடல்.

(இ) ஏதேனும் வகுப்பிலுள்ள அல்லது அத்தகைய பதவிக்கு அல்லது பதவிகளுக்கு இணைத்துக் கொள்ளப்பட வேண்டியுள்ளவர்களின் சம்பள அளவுகளை நிர்ணயித்தல், ஆணையாளரின் கலந்தாலோசனையுடன் அந்த சம்பள அளவுகளை காலத்துக்கு காலம் மீளாய்வு செய்தல், அல்லது சீராக்குதல் அத்துடன் கூட்டுறவு

ஊழியர்களின் வேதனத்தையும் சேவை நிபந்தனைகளையும் தீர்மானிப்பதில் ஆணைக்குழுவுக்கு உதவுவதற்காக ஆணைக்குழுவினால் அவசியமானதென கருதக்கூடியவாறான ஆலோசனைக் குழுவொன்றை அமைத்தல்.

(ஈ) ஏதேனும் வகுப்பில் அல்லது தரத்தில் உள்ள ஏதேனும் பதவிக்காக ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் சம்பள அளவுகளுக்கிணங்க சம்பளம் கொடுக்குமாறு கூட்டுறவுச் சங்கங்களுக்கு பணிப்புரை வழங்கல்.

(உ) (i) கூட்டுறவுச் சங்கமொன்றின் தீர்மானத்திற்கு அமைவாக கூட்டுறவு ஊழியர்களின் மேன்முறையீடுகளை விசாரித்தல்.

(ii) அதன் ஊழியர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பில் அதன் உரிமைகளைப் பிரயோகிக்கையில் கூட்டுறவுச் சங்கத்தினால் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறைகள் அல்லது நடவடிக்கை முறைகளைத் தீர்மானித்தல், அதன் ஊழியர்களுக்கெதிராக ஒழுக்காற்று விசாரணைகளை ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட காலத்துக்குள்ளாக நடாத்தி முடிக்குமாறு கூட்டுறவு சங்கத்திற்கு பணிப்பு வழங்கல் அத்துடன் ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்தினால் ஆக்கப்பட்ட ஒழுக்காற்றுக் கட்டளைகள் வாயிலாக எழும் மேன்முறையீடுகளை விசாரித்தல்.

(ஊ) ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர்கள் தொடர்பிலாக மேற்கொள்ளப்பட்டு வரவேண்டிய பதிவேடுகளை அல்லது அட்டவணைகளை இற்றைப்படுத்தப்பட்டு வைத்திருக்குமாறு தேவையான பணிப்புகளை வழங்குதல்.

(எ) மாகாணத்தினுள் செயற்படுத்தப்படும் சகல கூட்டுறவுச் சங்கத்தினாலும்,

(i) அதன் சகல ஊழியர் தொடர்பிலான விதித்துரைக்கப்பட்ட பெயர் அட்டவணை அல்லது பதிவேடு களை வைத்திருக்குமாறும் அத்துடன் ஏதேனும் ஊழியர் தொடர்பான விதித்துரைக்கப்பட்ட அறிக்கைகள் அல்லது பதிவேடுகள் ஆணைக்குழுவுக்கு தேவைப்படுத்தக் கூடியவாறான சந்தர்ப்பத்தில் தீர்மானம் எடுப்பதற்கு மேற்கூறப்பட்ட அறிக்கை அல்லது பதிவேடுகளை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு பணிப்புரை வழங்குதல்.

(ii) ஏதேனும் கூட்டுறவுச் சங்க காரியாலயத்திற்கு பிரவேசித்து அங்கு வைத்து பேணப்பட வேண்டிய புத்தகங்கள் கணக்குப் பதிவேடுகள் அல்லது வேறு அட்டவணைகள் எவற்றையும் பரிசீலனை செய்வதற்கும் அவற்றை சமர்ப்பிக்குமாறும் பணித்தல். அத்துடன் ஆணைக்குழுவின் தத்துவம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தரின் பொறுப்பில் எடுக்கும்படியும் பணிப்புரை வழங்குதல்.

(ஏ) ஏதேனும் கூட்டுறவுச் சங்க ஊழியரினால் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீடு தொடர்பாக அல்லது ஆணைக்குழுவிடம் அறிக்கையிடப்பட்ட கூட்டுறவு ஊழியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக உரிய சங்க உத்தியோகத்தர், ஊழியர் அல்லது மேன்முறையீடு விசாரணைக்கு அழைக்கப்பட வேண்டுமென ஆணைக்குழு கருதுமாயின் அந்த சாராரை அழைத்து விசாரணை செய்தல்.

(ஐ) ஏதேனும் கூட்டுறவுச் சங்கமொன்றின் எவராவது கூட்டுறவுச் சங்க ஊழியர் தொடர்பாக ஆணைக்குழுவுக்கு தேவைப்படக் கூடிய கோப்புகள், வேறு ஆவணங்களை அல்லது தகவல் என்பவற்றை குறித்துரைக்கப்பட்ட ஒரு திகதிக்கு முன்னர் கொடுத்துதவுமாறு அச்சங்கத்திற்கு பணித்தல்.

(ஒ) ஆணைக்குழுவிடம் முன்வைக்கப்பட்டுள்ள மேன்முறையீடுகள் தொடர்பாக தேவையான பரிசீலனைகள் நடாத்தப்பட்டு ஆணைக்குழுவிடம் அறிக்கையொன்றை சமர்ப்பிக்கும் பொருட்டு அலுவலர்களைக் கொண்ட மேன்முறையீடு விசாரணை அலுவலர் மற்றும் அலுவலர் குழு என்பவற்றை பெயரிடுதல் மற்றும் ஆணைக்குழுவினால் பணிக்கப்படுவதுடன் அதற்குரிய படிகளையும் செலுத்துதல்.

(ஓ) ஏதாவது கூட்டுறவுச் சங்கமொன்றின் ஊழியர் ஒருவரின் நடத்தை விசாரணையின் விடயப் பொருளாக இருந்து அதன் காரணமாக ஊழியரினால் தீர்ப்புக்கு எதிராக ஆணைக்குழுவிடம் மேன்முறையீடொன்று

செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அவர் மீள தொழிலுக்கமர்த்தல் தொடர்பான அறிவுறுத்தல்கள் உட்பட அந்த ஊழியர் தொடர்பாக ஆணைக்குழுவினால் கொடுக்கப்பட கூடியவாறான கட்டளை ஒன்றை நடைமுறைப்படுத்துமாறு அக் கூட்டுறவுச் சங்கத்திற்குப் பணிப்புரை வழங்குதல்.

(ஔ)(i) ஊழியர்களுக்கு அவர்களது சேவைகள் முடிவுறுத்தப்படுவதின் மீது வழங்கப்படக்கூடிய பணிக்கொடை அல்லது வேறு நன்மைகள் கொடுக்கப்படும் பொதுக் கோட்பாடுகளுக்கு அமைய அந்த கோட்பாடுகளை பணித்தல் வேண்டும்.

(ii) நிலுவைப் பணிக்கொடைத் தொகை, பிணைத்தொகை, வேதனம் மற்றும் நிலுவை வேதனம் அல்லது வேறு நன்மைகளாக அவருக்கு வழங்கப்பட வேண்டியுள்ள ஏதாவது படிகள் மற்றும் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் ஏதாவது நட்டஈட்டுத் தொகையாக இருப்பின் அதனையும் செலுத்தும்படி அச் சங்கத்திற்குப் பணித்தல் வேண்டும்.

(க) (i) எவராவது ஊழியர் வகிக்கும் பதவியை வகிப்பதற்கு இந்நியதிச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்டுள்ள பணி படிமுறைகளுக்கமைய பொருத்தமற்றது என ஆணைக்குழு தீர்மானம் எடுக்கும் சந்தர்ப்பத்தில் அதற்கு இசைவாகவுள்ள ஏதாவது அல்லது கட்டளையொன்று உரிய ஊழியருக்கு அல்லது உரிய சங்கத்திற்கு நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென கட்டளையிடுதல்.

(ii) ஆணைக்குழுவினால் மேலுள்ள (i) உட்பிரிவின் கீழ் செய்யப்படும் கட்டளைக்கு இசைவானதாக உரிய ஊழியர் தகுதியற்றவராக காணப்படும் போது அதற்கு உரியதான நேர்மையான காலக்கேடு வழங்கப்படுவதுடன் அதன் பின்னர் உரிய ஊழியரின் சேவைகள் முடிவுறுத்தப்பட வேண்டுமென கூட்டுறவுச் சங்கத்திற்கு பணிப்பு விடுத்தல் வேண்டும்.

(கா)(1) கூட்டுறவுச் சங்கமொன்றில் ஊழியர் நியமித்தல், இடமாற்றம் செய்தல், பதவி உயர்வு வழங்குதல் ஒழுக்கக் கட்டுப்பாடு மற்றும் சேவையை முடிவுறுத்தல் உட்பட அதற்கு எதிர்நேர் விளைவான விடயங்களுக்காக விதிகளைத் தயாரித்தல்.

(2) மேலுள்ள (1) உட்பிரிவில் ஆணைக்குழுவுக்காக குறித்தொதுக்கப்பட்டுள்ள தத்துவங்கள் பயன்படுத்தப்படும் போது ஆணைக்குழுவினால் செய்யப்படும் ஏதாவது தீர்மானம் அல்லது தீர்மானமெடுத்தல், மாற்றுதல், மீளாய்வு செய்தல் அல்லது இரத்துச் செய்தல் போன்றவற்றை ஆணைக்குழுவினால் மேற்கொள்ள முடியும்.

13. ஆணைக்குழுவின் செலவுகள் வருடாந்தம் மாகாண சபையினால் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் அதற்கான நிதி ஏற்பாடுகளிலிருந்து அத்தொகைகள் செலுத்தப்படல் வேண்டும்.

## பகுதி II

### கூட்டுறவுச் சங்கங்களும் அவற்றின் ஊழியர்களும்

கூட்டுறவுச் சங்க தொழில் தருநராக இருத்தல்.

14. எவரேனும் ஊழியர்களுக்கு அதன் நிதியிலிருந்து சம்பளமும் வேறு வேதனங்களும் அப்போதைக்கு கொடுக்கப்படும் ஒரு கூட்டுறவுச் சங்கம் அத்தகைய ஊழியரின் தொழில் தருநராக கருதப்படுதல் வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்களும் அவற்றின் ஊழியர்களும் ஆணைக்குழுவின் பணிப்புக்கு அமைந்தவர்களாதல்.

15. கூட்டுறவுச் சங்கமொன்று மற்றும் அச்சங்கத்தின் எவரேனும் ஊழியரும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவினால் கொடுக்கக்கூடிய ஏற்பாடுகளுக்கு அமைந்தாதல் வேண்டும். அத்துடன் இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவின் பணிகளையும், தத்துவங்களையும் நிறைவேற்றுவதிலும், புரிவதிலும், தொழிற்பாட்டிலும் ஆணைக்குழுவின் சகல தீர்மானம் 12(2) உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கும் கீழ்ப்படிந்து இறுதியானவையாதல் வேண்டும்.

16. ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்தின் ஏதேனும் ஊழியர் தொடர்பாக ஆணைக்குழுவினால் கொடுக்கப்படும் எல்லாப் பணிப்புகளும் 12(2) உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இறுதியானவையாதலும் அத்துடன் அந்த ஏற்பாடுகள் அந்த சங்கத்தினால் கொடுக்கப்பட்டன என்றாற் போன்று அத்தகைய ஊழியர்கள் அதனை பின்பற்றுவதற்கு கட்டுப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

ஆணைக்குழுவின் பணிப்புகள் கூட்டுறவுச் சங்க ஊழியர்களைப் பணிப்பதாதல் வேண்டும்.

17. 1994 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியதி சட்டத்தின் கீழ் அல்லது ஏதேனும் வேறு எழுத்து மூல சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்பொன்று, கட்டளையொன்று இந்நியதிச் சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள பணிப்புகளும் கட்டளைகளும் செல்லுபடியுடையவனாக இருக்கும்.

இந்நியதிச் சட்டத்தைக் தொடர்ந்து ஏற்படும் மாற்றங்கள்.

18. மேல் மாகாணத்தினுள் ஏதேனும் மாவட்டத்தில் கூட்டுறவு சங்கத்தின் ஏதேனும் பதவியொன்றுக்கு கீழ் எவரும் ஆகக்குறைந்தது இரண்டு வருட காலப் பகுதிக்கு மாவட்டத்தில் வதிவுள்ளவராக இருந்தாலொழிய, இல்லையேல் அவ்வாள் சங்கத்தின் பதவிக்கும் நியமிக்கப்படுதல் ஆகாது.

வதிவிட தகைமைகள்.

எவ்வாறாயினும், ஆணைக்குழுவின் அபிப்பிராயப்படி ஏதேனும் மாவட்டத்திலுள்ள ஏதேனும் கூட்டுறவு சங்கத்திலுள்ள பதவி எதற்கும் பொருத்தமான தேர்வு நாடி அம்மாவட்டத்தினுள் இல்லாதவிடத்து மாகாணத்தில் அமைந்துள்ள வேறொரு மாவட்டத்திலுருந்து பொருத்தமான ஒரு ஆளை அப்பதவியின் வெற்றிடத்தை நிரப்புவதற்கும் நியமிப்பதற்கும் அச் சங்கத்திற்கு அனுமதிக்கலாம்.

19. இந்நியதிச்சட்டத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகளில் எது எப்படி இருப்பினும் கவனத்திற் கொள்ளாது அமைச்சரின் இணக்கப்பாட்டுடன் மற்றும் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியும் மற்றும் உரிய அலுவலரின் விருப்பத்துடன் மேல் மாகாண அரசாங்க சேவையின் அலுவலர் ஒருவர் கூட்டுறவுச் சங்கத்தின் எந்தவொரு பதவிக்கும் ஆணைக்குழுவினால் நியமிக்க முடியும். அவ்வாறு மாற்றுச் சேவைக்கு கொண்டு செல்லப்பட்ட மாகாண அரசாங்க சேவையின் அலுவலருக்கு அந்த நோக்கத்திற்காக ஒரே முறையில் இரண்டு வருடங்கள் வீதம் ஆகக்கூடிய இரண்டு தவணைக்கான உரிய சேவை நிபந்தனை அனுமதிப்பதற்கும் இந்த ஆணைக்குழுவுக்கு தத்துவம் உண்டு.

மாகாண அரசாங்க சேவை யாளர்களின் மாற்றுச் சேவை.

20. ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் அதன் நிதியிலிருந்து அதன் ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் ஏனைய படிகள் எவையேனும் இருப்பின் அவற்றை செலுத்தல் வேண்டும்.

கூட்டுறவு ஊழியர்களின் சம்பளங்கள்.

21. (1) ஒரு கூட்டுறவுச் சங்கமானது அச்சங்கத்தின் ஊழியர் எவரையும் அதன் வேலைத்தளங்களில் ஏதேனும் ஒன்றிலிருந்து அதன் வேலைத்தளங்களுள் வேறொன்றுக்கு இடமாற்றம் செய்யவும் தத்துவம் கொண்டுள்ளது. அத்துடன் ஒழுக்காற்று காரணமின்றி ஏதேனும் காரணத்தினால் இடமாற்றம் செய்யப்படும் சந்தர்ப்பமொன்றில் அந்த இடமாற்றம் அந்த ஊழியரின் வேதனம், படி ஆகியவற்றில் ஏதும் பாதிப்புகளை ஏற்படுத்தலாகாது.

கூட்டுறவு ஊழியர்களின் இடமாற்றம்.

(2) ஒவ்வொரு சேவை ஊழியர்களின் இணக்கப்பாட்டை முதலில் பெறப்பட்டு இருந்தால் ஒத்த தரத்திலான பதவிகளை வகிக்கின்ற இரு ஊழியர்களினதும் கூட்டு வேண்டுகோளின் பேரில் மேல் மாகாணத்தில் ஒரு கூட்டுறவுச் சங்கமொன்றின் ஏதேனும் ஊழியர் வேறு கூட்டுறவுச் சங்கமொன்றுக்கு இடமாற்றம் செய்யும் தத்துவம் ஆணைக்குழுவுக்கு உண்டு.

(3) (அ) மேல் மாகாணத்தினுள் கூட்டுறவுச் சங்கமொன்றின் எவரேனும் ஊழியரினால் வேறு மாகாணமொன்றின் கூட்டுறவுச் சங்கமொன்றுக்கு இடமாற்றம் பெறப்படுவதாக செய்யப்படும் நேர்மையான வேண்டுகோள் இரண்டு சங்கங்களின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் ஆணைக்குழுவின் சான்றுபடுத்தலுடன் உரிய மாகாணத்தின் மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிடம் வழங்க முடியும்.

(ஆ) வேறு மாகாணமொன்றின் கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர்களினால் உரிய மாகாணத்தின் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் ஊடாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடமாற்றம் தொடர்பாக

கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டினதும் இணக்கப்பாடு அத்துடன் தேவையான ஏனைய தகைமைகளை ஆராய்ந்து பார்த்து அதன் பின்னரே அனுமதியளிக்க முடியும்.

(4) மேலுள்ள (1), (2), (3) ஆம் பிரிவு ஆணைக்குழு அனுமதிக்கப்பட்ட நிரந்தர கூட்டுறவு ஊழியர்களுக்காக மட்டுமே ஏற்புடையதாகும்.

ஊழியர்களை வேலையிலிருந்து நீக்குதலும் தண்டித்தலும்.

22. இந்நியதிச்சட்டத்தின் அல்லது அதன் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள விதிகள் அல்லது பணி நடவடிக்கை முறையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய அதனைத் தவிர ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்தினால் அக் கூட்டுறவுச் சங்கத்தின் எவராவது ஊழியர் ஒருவரை சேவையிலிருந்து இடை நிறுத்தப்படல் அல்லது நீக்குதல் அல்லது வேறு வகையாக அவரைத் தண்டிக்கப்படலாகாது.

கூட்டுறவு ஊழியரின் பிணைப் பொறுப்பு கொடுத்துதவுதல்.

23. (1) ஆணைக்குழுவினால் பணிப்பு வழங்கப்பட முடியுமான ஏதேனும் நிதித் தொகைக்கு கூடுதலான நிதித் தொகையை பிணையாக பொறுப்பு வகையாக கொடுத்துதவுமாறு கூட்டுறவுச் சங்கத்தினால் எவரேனும் ஊழியரை பணிக்கலாகாது.

(2) கூட்டுறவு சங்கம் ஒன்றில் எவரேனும் ஊழியரினால் பொறுப்பு வைக்கப்பட்டுள்ள பிணையாக ஏதேனும் நிதித் தொகை சங்கத்தின் பெயரினால் வங்கி ஒன்றில் வைப்புச் செய்யப்படுவதுடன், அதற்குரியதான ஏதேனும் வட்டியாக திரளும் தொகை சேவையிலிருந்து ஓய்வு பெறும்போது அல்லது சேவையிலிருந்து கேட்டு விலகும் போது அதனை ஊழியருக்குக் கொடுக்கப்படல் வேண்டும்.

24. (1) இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டுள்ளதான, அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டுள்ள அனைத்து விதிகளும் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட பின்னர் அது இந்த நியதிச்சட்டத்தின் கீழ் உள்ள ஏற்பாடுகள் மற்றும் சமமான செல்லுபடியாகும் வகையில் கருதப்படுவதுடன் அதற்கு உரியதான சட்டரீதியான தத்துவங்கள் இருத்தல் வேண்டும்.

(2) இந்நியதிச் சட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ள சகல விதிகளும் இந்நியதிச்சட்டத்தின் கீழ் ஏற்பாடுகளென பின்பற்றப்படுவதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அதன் ஊழியர்களும் உடன்பாடு கொள்ளல் வேண்டும்.

ஊழியர் சகாய நிதியமும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியமும்.

25. தொழில் தருநராக இருக்கின்ற ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் அரசாங்கத்தின் ஒவ்வோர் ஊழியரும் சட்டத்தினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய தொகையை காலந்தோறும் பங்களிப்பு தொகை தொடர்பான ஊழியர் சகாய நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் போன்றவற்றிற்கு ஏற்புடைய எழுத்து மூலமான சட்டத்திற்கு அமைய செலுத்துதல் வேண்டும்.

கூட்டுறவுச் சங்க ஊழியர் சங்கத் தின் ஊழியர் களேயன்றி ஆணைக் குழு வின் ஊழியர்கள் அல்ல.

26. சேவையை ஏற்றுக் கொண்டதாவது இந்நியதிச் சட்டம் பயனுறும் திகதிக்கு முன்னர், பின்னர் சக ஊழியர்களும் தாம் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள சங்கத்தில் சேவையாளர்களாதலும் அச்சங்கத்தில் சேவையில் ஈடுபட்டுள்ளவராகவும் அந்த சங்கத்திற்கு பக்கச்சார்பற்றவராகவும் இருப்பதாக கவனத்தில் கொள்ளப்படும்.

## பகுதி III

### ஆணையாளரின் தத்துவங்கள்

ஆணையாளரினால் சங்கங்களைத் தரம் பிரித்து பணியாட் தொகுதியினரைத் தீர்மானித்தல்.

27. (1) கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டுள்ள சம்பள முறையின் கீழ் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங்களுக்காக ஊழியர்களை தரம் பிரித்தல் அத்துடன் தரங்களுக்கமைய இருக்க வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கையையும் தீர்மானித்தல் மற்றும் காலத்திற்குக் காலம் தான் பொருத்தமானது என கருதப்படும் வகையில் வேறுபடுத்துவதற்கும் ஆணையாளர் தத்துவம் கொண்டவராதல் வேண்டும்.

(2) (1) ஆவது உட்பிரிவின் கீழ் ஆணையாளரினால் செய்யப்பட்ட தீர்மானத்திற்கு முரணாக ஏதேனும் சங்கம் ஒன்றினால் எவரையும் தொழிலுக்கமர்த்தலாகாது.

சம்பள அளவுத் திட்டம் என்பன தொடர்பாக ஆணைக்குழு ஆணையாளரின் ஒருப்பாட்டைப் பெறுதல்.

28. ஏதேனும் வகுப்பில் அல்லது ஏதேனும் தரத்தில் ஏதேனும் பதவிக்கு அல்லது பதவிகளுக்கு உரியதான சம்பள அளவு திட்டத்தை நிர்ணயித்தல், காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்தலும் ஆணையாளரின் இணக்கத்துடன் ஆணைக்குழுவினால் செய்தல் வேண்டும்.

## பகுதி IV

### பல்லினமான விடயங்கள்

ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் மற்றும் அலுவலர் களினதும் சுதந்திரம்.

29. ஆணைக்குழுவினால் இந்நியதிச் சட்டத்தில் குறித்தொதுக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் எடுக்கப்படும் ஏதேனும் தீர்மானம் அல்லது செய்யப்படும் அல்லது செய்யப்பட முடியாத அல்லது ஏதேனும் செயற்பாடுகள் தொடர்பாக ஆணைக்குழுவின் அங்கத்துவ தனிப்பட்டவர் அல்லது ஆணைக்குழுவின் செயலாளர் அல்லது பணியாள் தொகுதியில் ஏதேனும் அலுவலரினால் நியாயமாகச் செய்யப்படும் அல்லது செய்யாது விடப்படும் அல்லது பணி தொடர்பாக அவருக்கெதிராக ஏதேனும் நீதிமன்ற செயற்பாடுகள் நடாத்தப்படுதலோ ஆகாது.

ஒப்பந்தம் அல்லது அமைய அல்லது நாட் சம்பள ஊழியர் களை சேவையில் ஈடுபடுத்துதல்.

30 (1) ஒரு கூட்டுறவுச் சங்கமானது அதன் திறமையான செயற்பாட்டையும் வினைத் திறமைமையும் மனதிற் கொண்டு ஆகக் கூடிய ஆறு மாதகாலப் பகுதிக்காக ஆணைக்குழுவின் முன் அனுமதியுடன் ஒப்பந்த அடிப்படையில் நிபுணர் ஒருவரின் அல்லது எவரேனும் சிறப்பறிஞரின் சேவையை குறிப்பிட்ட காலத்திற்கு பெற்றுக் கொள்ள முடியும்.

(2) அமைய அல்லது நாட்சம்பளம் செலுத்தப்படும் ஊழியர்களை அல்லது துண்டு வேலை அடிப்படையில் செலுத்தப்படும் ஊழியர்களை ஆகக்கூடியதாக ஆறு மாத காலப்பகுதிக்காக சேவையில் ஈடுபடுத்துவதற்கு கூட்டுறவுச் சங்கமொன்றுக்கு முடியுமாகும்.

(3) மேலுள்ள (1) மற்றும் (2) இன் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள எவரேனும் ஊழியருக்காக ஆணைக் குழுவின் அனுமதியின்றி பதவியில் நிரந்தர சேவை எதுவும் வழங்கப்படலாகாது.

(4) இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக ஏதேனும் சங்கத்தினால் ஊழியர் ஒருவரை சேவையில் ஈடுபடுத்தப்படும் போது ஊழியர்களுக்கு பணிக்கொடை நிதி அல்லது படி வழங்கப்பட்டிருந்தால், அவ்வாறு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள எல்லா நிதி தொகையும் செலுத்துவதற்கு பொறுப்பாயிருந்த சாரார்களிடமிருந்து அந்த பாரிய தொகையை ஆணையாளரினால் அறவிடப்பட வேண்டும்.

குற்றம் மற்றும் தண்டம்.

31. (1) (அ) இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறினால், அல்லது

(ஆ) செய்யப்பட வேண்டுமென ஆணைக்குழுவினால் பணிக்கப்பட்டுள்ள ஏதேனும் செயற்பாடு அல்லது இந்நியதிச்சட்டத்தின் பணிகளுக்காக ஆணைக்குழு அல்லது மேற்கூறப்பட்டுள்ளவாறு தத்துவம் குறித்தொதுக்கப்பட்டுள்ள ஏனைய ஒருவருக்கு வழங்குமாறு பணிக்கப்படும் ஏதேனும் தகவலொன்று வழங்குவது, வேண்டுமென்றே கவனத்தில் கொள்ளாது விடுதல் அல்லது நிராகரித்தல் அல்லது விட்டு விடுதல், அல்லது

(இ) வேண்டுமென்றே பொய்யான தவணை அறிக்கையொன்றை சமர்ப்பித்தல் அல்லது பொய்யான தகவல்களை வழங்குதல்.

ஏதேனும் கூட்டுறவுச் சங்கமொன்று அல்லது அவற்றின் ஏதேனும் அலுவலர் ஒருவர் அல்லது ஊழியர் இந்நியதிச் சட்டத்தின் கீழ் குற்றமொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும்.

(2) அத்தகைய குற்றம் தொடர்பாக கூட்டுறவு சங்கத்தின் பணிப்பாளர் குழு அல்லது அதன் ஒவ்வொரு உறுப்பினர் அல்லது அதன் ஏதேனும் அலுவலர் அல்லது ஊழியர் அல்லது கூட்டு அல்லது தனிப்பட்டவர் அல்லது பொறுப்புக் கூறுவதற்கு கட்டுப்பட்டு ஆளாதல் வேண்டும்.

(3) (1) ஆவது உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் குற்றம் புரியும் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களும் அல்லது எல்லா அலுவலர்களும் அல்லது எல்லா ஊழியர்ளும் நீதிபதி ஒருவரின் முன்னிலையில் நடைபெறும் சுருக்க விசாரணையின் பின்னர் குற்றம் ஒன்றிக்கு குற்ற தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பதாயிரம் ரூபாவுக்கு குறையாமல் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப் பணத்திற்கும் அல்லது ஆறு மாதத்துக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கான மறியற் தண்டனைக்கும் அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற் தண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(4) இந்நியதிச் சட்டத்தின் கீழான ஏதேனும் தவறுகள் கூட்டுறவு சங்கத்தினால் புரியப்பட்டவிடத்து அச்சங்கத்தின் ஒவ்வோர் அலுவலரும் அத்தவறு தமது அறிவில்லாமல் புரியப்பட்டதென அல்லது அத்தவறு புரியப்படுதலை தடுப்பதற்குத் தம்மாலியன்ற விழிப்புக்கவனம் எல்லாவற்றையும் பிரயோகித்தாரென எண்பித்தாலொழிய, அத்தவறுக்குக் குற்றவாளியாக கருதப்படுதல் வேண்டும்.

(5) ஆணைக்குழுவினால் வழங்கப்படும் கட்டளையை எவராவது நடைமுறைப்படுத்துவதை அசட்டை செய்தால் அல்லது மறுத்தால் அது தொடர்பாக ஏதேனும் கூட்டுறவுச் சங்கம் ஒன்று அல்லது ஏதேனும் அலுவலர் அல்லது ஏதேனும் ஊழியர் அல்லது ஏதேனும் கூட்டுறவுச் சங்கமொன்று குற்றவாளியாகக் காணப்படும் போது அந்த கூட்டுறவு சங்கம் அல்லது அந்த அலுவலர் அல்லது அந்த ஊழியர்,

(அ) மேலுள்ள (3) ஆவது உட்பிரிவின் கீழ் பணிக்கப்படும் ஏதேனும் தண்டனைக்கு அல்லது மறியற் தண்டனை அல்லது தண்டனை இரண்டுக்கும் அல்லது மேலதிக அந்தக் குற்றம் தொடர்பாக குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் பின்னர் அதனை அசட்டை செய்தல், விலகுதல் மேலும் மேற்கொள்ளப் பட்டால் ஒவ்வொரு நாளுக்காக ரூபா ஐயாயிரம் தண்டப்பணமாக செலுத்தப்படல் வேண்டும்.

(ஆ) எவரேனும் ஊழியர் மீள சேவைக்கு அமர்த்துமாறு தேவைப்படுத்தி ஆணைக்குழுவினால் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலை அல்லது கட்டளைகளை நிறைவேற்ற தவறியமை தொடர்பாக விளங்கும்போது அவ் ஊழியரை மீள சேவையில் அமர்த்துவதற்கு கூட்டுறவுச் சங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(6) அதன் ஒவ்வொரு தண்டனையின் மற்றும் ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கமைய அந்த ஊழியரை மீள சேவைக்கு அமர்த்துமாறு தேவைப்படுத்தி அமர்த்தப்பட்டிருக்க வேண்டிய திகதியிலிருந்து தொடங்கி அத்தகைய கூட்டுறவுச் சங்கம் குற்றம் தீர்ப்பளிக்கப்பட்ட திகதியன்று முடிவடையும் காலப்பகுதியின் போது ஒவ்வொரு நாளும் அவர் சேவையில் ஈடுபட்டிருந்தால் அவர் உரித்துடையவராக இருந்திருக்கக்கூடிய சம்பளத்தின் அல்லது படியின் வீதத்தில் கணக்கிடப்பட்ட வேதனத்தை அத்தகைய ஊழியருக்கு கொடுத்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்கமொன்று கொடுப்பதற்கு பொறுப்புடையதாகவுள்ள ஏதேனும் பணத்தொகை எந்த நீதிமன்றத்தினால் அது குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதோ அந்த நீதிமன்றக் கட்டளை மூலம் அறவிடப்படலாம். அத்துடன் அவ்வாறு அறவிடப்பட்ட தொகை ஊழியருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

ஆணைக்குழுவின் நடவடிக்கைகளில் தலையிடுதல்.

32. தமது கடமையின் போது தவிர வேறுவகையாக, நேரடியாகவோ, மறைமுகமாகவோ, தாமாகவோ, எவரேனும் ஆள் மூலமாகவோ ஆணைக்குழுவின் ஏதேனும் முடிவை அல்லது அதன் எவரேனும் உறுப்பினரைச் செல்வாக்குக்கு உட்படுத்துகின்ற அல்லது செல்வாக்குக்கு உட்படுத்த முனைகின்ற அத்தகைய ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளி யாதல் வேண்டும். அத்துடன் நீதிவான் ஒருவர் முன்னிலையில் சுருக்க விசாரணையின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ரூபா ஐம்பதாயிரத்திற்கு குறையாமலும் ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேற்படாத வகையிலும் குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதத்திற்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கான மறியற்தண்டனைக்கு அல்லது இரண்டு தண்டனைக்கும் ஆளாதல் வேண்டும்.

அதிகாரமளிக்கப் படாமல் தகவல் களை வெளியிடல் தடுக்கப் பட்டுள்ளது.

33. ஆணைக்குழுவின் எவரேனும் ஆணைக்குழுவின் செயலாளர், ஆணைக்குழுவின் பணியாற்றொகுதியில் ஏதேனும் உறுப்பினர் அல்லது வேறு ஆள் எவரும் தமது அலுவலக பணிகளைப் பிரயோகிக்கும் போது தவிர வேறு வகையாக தமது கடமைகளின் போது அவரது அறிவுக்கு எட்டிய எத்தன்மையான ஆவணம், கடிதத் தொடர்பு, தகவல் ஏதேனும் உள்ளடக்கங்களை வெளியிடுதலோ ஆள் எவருக்கும் வெளிவிடுதலோ ஆகாது.

34. ஆணைக்குழுவின் அல்லது எவரேனும் உறுப்பினர் அல்லது அலுவலர் அல்லது ஏதேனும் கூட்டுறவுச் சங்கம் அல்லது அந்த கூட்டுறவுச் சங்கத்தின் முகாமைத்துவ குழுவின் எவரேனும் உறுப்பினர் அல்லது அப்பணிகளைப் பிரயோகிக்கும்போது தொடர்பாக இடம்பெற்ற எழுத்திலான அல்லது வாய் மூலமான பரிமாற்றங்கள் ஏதேனும் சிறப்புரிமைகள் சட்ட நடைமுறையிலான விடயங்களை வெளியிடுவதற்கும் அவ்வாறு சமர்ப்பிப்பதற்கும் அல்லது வெளியிடுவதற்கும் தலைவரின் எழுத்தில் சம்மதித்தாலொழிய எவரேனும் ஒருவருக்கு அனுமதி அளிக்கப்படலாகாது. இல்லையேல் கட்டாயப்படுத்தலோ ஆகாது.

ஆணைக்குழுவின் கடிதத் தொடர்புகள் சிறப்புரிமை கொண்டனவாதல்.

35. 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் கீழ் மேன்முறையீடு ஒன்றை விண்ணப்பித்திருந்தால் அச்சந்தர்ப்பத்தில் அல்லது வேறு எவரோ நீதிமன்றில் அதற்குரிய விடயத்துக்கு நீதி காண்பதற்கான சந்தர்ப்பத்தில் ஆணைக் குழுவினால் அதற்குரிய மேன்முறையீட்டை ஏற்றுக்கொள்ளுதல் ஆகாது.

கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அதன் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தை ஏற்புடைய தாக்குதல்.

36. இந்நியதிச் சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய,

பொருள் கோடல்.

"மாகாணம்" என்பது, மேல் மாகாணம் என்று பொருள்படும் என்பதுடன்,

"அமைச்சர்" என்பது, மேல் மாகாணத்தின் கூட்டுறவு அபிவிருத்தி எனும் விடயப் பொறுப்புக்கான அமைச்சர் எனப் பொருள்படும்.

"ஆணையாளர்" என்பது மேல் மாகாணத்தில் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அத்துடன் கூட்டுறவுச் சங்க பதிவாளர் எனப் பொருள்படும்.

"கூட்டுறவுச் சங்கம்" என்பது, கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பான சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள மற்றும் மேல் மாகாணத்தினுள் தலைமை அலுவலகத்தைக் கொண்டுள்ள, மேல் மாகாணத்தில் தொழிற்படும் சங்கம், கழகம், சபை ஆகும்.

"மாவட்டம்" என்று கருதப்படுவது, மேல் மாகாணத்தில் அமைந்துள்ள கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்கள் எனப் பொருள்படும்.

"அலுவலர்" என்பது, சங்கம், கழகம் மற்றும் சங்கம் சபையொன்றின் அல்லது அங்கு ஏதேனும் கிளையின் தலைவர், உப தலைவர், செயலாளர், தனாதிகாரி அல்லது சங்கம் ஒன்றின் நிர்வாக சபை உறுப்பினர், பணிப்பாளர் குழுவின் உறுப்பினர் மற்றும் சங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பான நிறைவேற்றுப் பணி வழங்குவதற்கு சங்கத்தின் நிர்வாக கட்டளைகளின் அல்லது துணை விதியின் மூலம் அதிகாரம் குறித்தொதுக்கப்பட்டுள்ள ஏனைய எவராவது ஒருவர் என்றும் பொருள்படும்.

"ஊழியர்" என்பது, இந்நியதிச் சட்டத்தின் பொருளுக்குட்பட்ட ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர் என்று பொருளாகும்.

37. இந்நியதிச் சட்டத்தின் சிங்களம் மற்றும் தமிழ் உரைகளுக்கிடையே ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

சிங்களம் மற்றும் தமிழ் உரைகளிடையே ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**அட்டவணை – 01**

**ஆணைக்குழுவின் தலைவர்/உறுப்பினரால் செய்யப்பட வேண்டியுள்ள சத்தியப்பிரமாணம்**

*…………………………………………………………………………………………………………ஆகிய நான், மேல் மாகாணத்தின் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் தலைவர்/உறுப்பினராக நியமிக்கப்பட்டதன் காரணமாக மேல்மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் தலைவர்/உறுப்பினர் பதவிக்குரிய பணியை பட்சமோ, பேதமோ, பயமோ, நயமோ இன்றியும் நிறைவேற்றுவேன் எனவும் அவ்வாறு செய்யும் போது அத்தகைய பணிகள் தொடர்பிலான எக்கருமங்களையும் ஆள் எவருக்கும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ வெளியிடமாட்டேன் எனவும் இத்தால் சத்தியம் செய்கின்றேன்/பயபக்தியுடனும் விசுவாசமாகவும் உறுதிப்படுத்துகின்றேன்.*

……………………………………………

*20 ………… ஆண்டு ………… மாதம் ………… ஆந் திகதியாகிய இன்று என் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது. உறுதி மொழியப்பட்டது.*

……………………………………

*நீதிமன்ற நீதிபதி*

**அட்டவணை – 02**

**ஆணைக்குழுவின் அலுவலரினால் செய்யப்பட வேண்டியுள்ள சத்தியப்பிரமாணம்**

*…………………………………………………………………………………………………………ஆகிய நான், மேல் மாகாணத்தின் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர்/அலுவலராக கடமையை நிறைவேற்றுவதற்கு பணிக்கப்பட்டுள்ள அதன் செயலாளர் அலுவலர் பதவியின் கடமை நடவடிக்கைகளை நிறைவேற்றும்போது கடமைக்கு உரித்தான எனது அறிவுக்கு எட்டக்கூடிய எக்கருமங்களையும் ஆள் எவருக்கும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ வெளியிடமாட்டேன் என சத்தியம் செய்கின்றேன்/பயபக்தியுடனும் விசுவாசமாகவும் உறுதிப்படுத்துகின்றேன்.*

……………………………………………

*20 ………… ஆண்டு ………… மாதம் ………… ஆந் திகதியாகிய இன்று என் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது. உறுதிமொழியப்பட்டது.*

……………………………………

*தலைவர்,*
*மேல் மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு.*

*11-1218*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.